பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 21 சனிக்கிழமை (03-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 127

# கடந்த 3 மாதத்தில் மட்டும் 109 அப்பாவித் தமிழர் பலி!

## படையினரின் தாக்குதல்களில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

தமிழீழத்தில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் ஸ்ரீலங்காப் படையினரின் தாக்குதல்களால் 109 தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளாலிக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தில் 67 தமிழ் மக்களும் —

சுப்பர்சொனிக் விமானங்கள் இலக்கின்றி நடத்திய தாக்குதல்களில் 11 பேரும் —

புக்கார, சியாமாசெட்டி குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய குண்டுவீச்சு மற்றும் தாக்குதல்களில் 10 பேரும் —

ஸ்ரீலங்காப் படையினர் கண்மூடித்தனமாக நடத்திய ஷெல், பீரங்கி மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களினால் மேலும் 21 பேரும் — இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி தொடக்கம் மார்ச் 31 ஆம் திகதி வரையான — 3 மாதங்களிலேயே மேற்கண்ட 109 தமிழ் மக்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தாக்குவதாகவும் விடுதலைப் புலிகளைத் தேடி அழிப்பதாகவும் கூறிக் கொண்டு ஸ்ரீலங்காப் படையினர் அப்பாவித் தமிழ் மக்களையே அழிக்கின்றனர். (ஒ)

## இயக்கச்சியில் சண்டை

இயக்கச்சியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றிரவு 7 மணியளவில் சண்டை மூண்டது.

முகாமில் இருந்து புதுகாட்டுச் சந்திப் பக்கமாக படையினர் முன்னேற முயன்ற சமயம் சண்டை மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ-15)

குமண இன்று வந்து சேரும்:

## ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் நாளை இங்கு வெளியாகும்

ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சைப் பெறுபேறுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் என்று கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இன்று (சனிக்கிழமை) மாலைக்குள் குமண கப்பல் பெரும்பாலும் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் பரீட்சை முடிவுகள் எடுத்து வரப்படுவதாக நேற்று மாலை இங்கு தகவல் கிடைத்ததாகவும்—

நாளை ஞாயிறு விடுமுறையானபோதும் பரீட்சை முடிவுகளை அன்று வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும்—கல்வி அலுவலக அதிகாரி மேலும் தெரிவித்தார் (ஒ-3)

## 1,750 பரல் மண்ணெண்ணெய் நேற்று 'நில்கிரி'யில் வந்தது

யாழ்ப்பாணம், ஏப் 3

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'நில்கிரி' கப்பலில் ஆயிரத்து 750 பரல் மண்ணெண்ணெய் எடுத்துவரப்பட்டது.

கப்பலில் இருந்து மண்ணெண்ணெய் இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பிக்கப்பட்டன.

இதே வேளை, குமாரி கப்பலில் இருந்தும் நேற்று பொருள்கள் இறக்கும் வேலைகள் தொடர்ந்து இடம்பெற்றன. (ஒ-3)

## புலிகள் பெரும் தாக்குதலை வடக்கில் நடத்தத் திட்டம்

### ஸ்ரீலங்காப் படை வட்டாரங்களில் பீதி

கொழும்பு, ஏப். 3

வடக்கில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

விடுதலைப் புலிப் போராளிகள் எந்நேரமும் பாரிய தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்பதால், படை வட்டாரங்களில் பீதி நிலவுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கில் தாக்குதல் நடத்துவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் நானூறு போராளிகள் கிழக்கில் இருந்து நகர்த்தப்பட்டுள்ளனர் என்று இராணுவ பிரிகேடியர் ஒருவர் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இதற்கிடையில்—

கொழும்பிலும் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தலாம் என்று பரவலாக அச்சம் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## கம்பன் விழாக் காண மக்கள் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஏப். 3

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஐந்து நாள் கம்பன் விழா நேற்றுக் கோலாகலமாக ஆரம்பமாகியது.

கம்பன் கோட்டத்திலிருந்து பிற்பகல் 4 30 மணிக்கு கம்பனின் உருவப்படம் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. மங்கையர்கள் தமிழ்வாழ்த்து இசைத்தபடி மலர் தூவ, பெண்கள் பூரண கும்பங்களை ஏந்தியவாறு அணி நிரையாகச் சென்றனர். பல வித்துவான்களின் நாதஸ்வர தவில் இசை ஒலிக்க விழாத் தலைவர், விருது பெறுவோர், கௌரவிக்கப்படுவோர், சமயக் குருமார்கள் மற்றும் பிரமுகர்கள் ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில் விழா நடைபெற்றது. மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனப் பேராயர் டி. ஜே அம்பலவாணர், அருட்திரு எஸ். எச். ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் தொடக்க உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து பண்டிதர் சி நமசிவாய தேசிகர், பண்டிதர் மு கந்தையா, பண்டிதர் க கிருஷ்ண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக ரஷ்யாவுக்குள் நுழைய இலங்கையர் பலர் முயற்சி

### ஒரு மாதத்தில் 293 பேர் கைது

கொழும்பு, ஏப். 3

ரஷ்யாவிற்குள் சட்டவிரோதமாகப் பிரவேசிக்கும் இலங்கையர் தொகை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதத்தில் மட்டும் ரஷ்யப் பொலீஸார், சட்டவிதிகளை மீறிப் பிரவேசித்த ஆயிரத்து 139 வெளிநாட்டவர்களைக் கைது செய்தனர் என்றும்—

அவர்களில் 293 பேர் இலங்கைப் பிரஜைகள் என்றும் பி. ரி. ஐ. செய்தி ஒன்று தெரிவித்தது.

சோவியத் யூனியன் பிளவுபட்டு பல துண்டுகளானதை அடுத்து அதன் மிகப்பெரிய குடியரசுகளில் ஒன்றான ரஷ்யா தனிநாடு ஆகியதும்—

புதிய தனிநாடுகளின் எல்லைகள் முறையாகப் பந்தோபஸ்து செய்யப்படாததால் அந்நாடுகளுக்குள் சட்டவிரோதமாகப் புகுவோர் இலகுவாக நுழைந்து விடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். (உ-எ)

## இன்றும் படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஏப். 3

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமையும் வழமையான நேரத்துக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ)

கிட்டு உயிரிழந்த சம்பவம்:

## உலகத் தமிழர் அமைப்பு கிளின்ரனுக்கு முறையீடு

விடுதலைப் புலிகள் இயக்க மூத்த தளபதி திரு. கிட்டு கப்பலில் நடுக்கடலில் உயிரிழந்த சம்பவம் குறித்து உலகத் தமிழர் அமைப்பு என்ற ஸ்தாபனம் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு முறையிட்டுள்ளது

இத் தகவலை உலகத் தமிழர் அமைப்பின் உபதலைவர் திரு. ராஜரத்தினம் வெரித்தாஸ் வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கிட்டு விவகாரம் குறித்து ஐ நா. தலைவர். இந்தியப் பிரதமர் ஆகியோருக்கும் தமது அமைப்பு முறையிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகத் தமிழர் அமைப்பு. அமெரிக்கா வட கரோலினா மாநிலத்தில் செயற்பட்டு வருகின்றது. (இ-எ)

தமிழ்நாடு சட்டசபையில் குழப்பம் நீடிப்பு

## காங்கிரஸ் எம். எல். ஏக்கள் வெளிநடப்பும் ஆர்ப்பாட்டமும்

தமிழ்நாடு சட்டபேரவையில் இருந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்புச் செய்தனர். அவர்கள் பேரவைத் தலைவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு வெளிநடப்புச் செய்ததோடு பேரவைக்கு வெளியே ஆர்ப்பாட்டமும் செய்தனர்.

பேரவைத் தலைவரின் உத்தரவுக்கிணங்க பேரவைக் காவலர்கள் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

திரு. ஞானசேகரன், டாக்டர் குமாரதாஸ், திரு. ரெங்கநாதன் ஆகியோர் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கும்படி பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற விவாதத்தின் பின்னரே வெளிநடப்பும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன.

திமுக. உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதிக்கும் பேரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டது. (இ-க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 41, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (25056)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். பன்ரம் கோழி முட்டைகளும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25059)

அழகிய கறுப்பு பிறவுண் கலந்த பொமரேனியன் நாய்க் குட்டிகளும், உயர்ரக கறுப்பு இன அல்ஷேசன் நாய்க் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48/1, முதலாம் ஒழுங்கை, (மக்ரவல் லேன்) பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். (25062)

## சைக்கிள் விற்பனைக்கு

புதிய மொடல் Pebo 12 Speed [12 கியர்), Racing Cycle விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். 'யது நுண்கலை நிலையம்' இல: 618, நாவலர் வீதி, அரியாலை. [25065)

## தேவை

கடையில் வேலை செய்த முன் அனுபவமுள்ள விற்பனையாளர் உடனடியாகத் தேவை. சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: சந்திரன் வர்த்தக நிலையம், சந்தை உட்புறம், சாவகச்சேரி. (சி-4871)

ஜாம் போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும் சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி/4870)

## மணமகன் தேவை

யாழ். இந்து வயது 40, புனர்பூசம் நட்சத்திரம், செவ்வாய் 8, கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த உத்தியோகம் வகிக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பிக்கவும், இல. 512, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (25050)

## இலவச திருமணசேவை

29 வயது, உத்தரட்டாதி, உயரம் 6அடி, U. K. M Sc என்ஜினியருக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. விவாகம் இலங்கை / U. K. இல் செய்யலாம். விண்ணப்பிக்கவும்: விமலா, யாழ்/ நாச்சிமார் கோவிலடி. (25005)

## ஆண்டு-5 புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது, மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படும். விடை அளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், இல 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (25006

## ஆண்டு - 5 புலமைப்பரிசில்

சிந்தனையைத் தூண்டும் முன்மாதிரிப் பரீட்சை 1993, எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்காத வெளிமாணவர்களும் தோற்றலாம். இலவச வகுப்புக்களும் நடத்தப்படும். பரீட்சை ஆரம்பம்: 04-04-93 ஞாயிறு காலை 10-00, மாலை 3-00. உதயன் அக்கடமி, நல்லூர். (25054)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்திலும் 2ஆவது, 4 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஊக்குவிப்புப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4583)

கட்டுரை மலர்கள்-60; 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு உகந்தது. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். சி 4727)

## மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாகச் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (25016)

## சித்திரம்

ஆண்டு - 11 க. பொ. த (சா/த) பரீட்சை பாடத் திட்டப்படி தயாரித்தவர்; ''யசோ'', சித்திரக் கல்வி ஆலோசகர் அளித்த மதிப்புரை கொண்டது. பரபரப்பாக விற்பனையாகிறது. (25040)

## PHARMACIST

10 - 04 - 1993இல் ஞானக் குழந்தை இல்லத்தில் ஆரம்பமாகவிருக்கும் மருந்தாளர் பயிற்சி பாட நெறி (External Pharmacist)க்கு ஆன பாடவிதானம் பற்றி பயிலுவோருக்கு வெளிப்படுத்துவதற்கு 03 - 04 - 1993இல் இருந்து 06 - 04 - 1993 வரை பிற்பகல் 1 மணி தொடக்கம் 3மணி வரை சமுகம் கொடுக்கவும். ஞானக் குழந்தை இல்லம், யாழ்ப்பாணம் (சி-4869)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11 ஆம் வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கான வினாத்தாள்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-4584)

## மாதிரி வினாத்தாள்

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் முன்னோடிப் பயிற்சி வினாத்தாள்கள் (ஆண்டு 4 பாடத்திட்டத்தில்) தமிழ், கணிதம், ஆங்கிலம் மாதாந்தம் முதலாவது ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படும், விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (25007)

## A/L மாதிரி வினாத்தாள்

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை, கணிதப் பிரிவுகளுக்கான அனைத்துப் பாடங்களுக்கும், மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி 4582)

## சுதேச விளையாட்டுகள்

கிட்டியடி, சடுகுடு, கெந்திப் பிடித்தல், கிளித்தட்டு, போர் அடித்தல், பட்டம் ஏற்றுதல், வார் ஓட்டம், சல்லிக் கட்டு மற்றும் விளையாட்டுகளைப் பற்றித் தெரிந்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: ஆ. சண்முகநாதன், இல. 200 A, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (25060)

## விறகுச் சிக்கனம்

கணகணப்பூட்டும் சாணவிறாட்டி பாவித்துச் சமையல் அடுப்பு விறகில் சிக்கனம் காணுங்கள். சாணவிறாட்டி ஒன்றின் விலை ரூபா. 1/- மட்டுமே. 'மில்க்வைற்' (சி/4866)

---

கோண்டாவில் கிழக்கு

# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் சப்பற வெள்ளோட்டம்

காலம்: இன்று சனிக்கிழமை (03-04-1993) பிற்பகல் 4-00 மணி

ஆசியுரைகள்:

1. நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்
2. திரு. சுந்தரம் டிவகலாலா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
3. சிற்ப ஆசிரியர் ஆ. சிவரத்தினம் அவர்களைக் கௌரவித்தல்

மாலை நிகழ்ச்சிகள்:

★ ஒளியூட்டப்பட்ட புதிய சப்பறத்தில் அம்பாள் வீதி வலம் வருதல்
★ நாதஸ்வரக் கச்சேரி
★ விசேட தவில் கச்சேரி (சுதாகரன் / நித்தியானந்தன்)
★ சொற்பொழிவு; திரு. வ குமாரசாமி ஐயர்
★ பார்வதி சிவபாதம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி.

8ஆம் திருவிழா (சப்பறம்) உபயகாரர்கள்.

(25061)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 10 | 15 |
| 06 | 03 |
| 1926 | 1992 |

## அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 03-04-1993


எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புப் பப்பாவே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் உருவமும் நினைவும் எங்கள் மனதை விட்டு நீங்கா. பப்பாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
உறவினர், நண்பர்கள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். [6089]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 23 | 04 |
| 07 | 03 |
| 1930 | 1993 |

அமரர்

## கதிரவேலு இரத்தினசபாபதி

(முன்னைநாள் பெருந்தோட்டத் திணைக்கள உத்தியோகஸ்தரும், பூங்கனியியற் துறை முகாமையாளரும்)


எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (03-04-1993) சனிக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (25048)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 30 | 30 |
| 04 | 03 |
| 1923 | 1992 |

## பொன்னம்பலம் சதாசிவம்

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து, எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டு பிரிந்தாலும், உங்களின் நினைவுச் சுடர் எங்களின் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் இன்னலுறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரன், உறவினர்கள்.

மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (25017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சுதேசியம்பேணலுக்கு இப்படியும் சவாலா?

ஏப்ரல் முதலாம் திகதியான கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணக் குடாநாட்டில் புதிய அநாகரிக அலை ஒன்று தலைகாட்டியிருந்தது. ஏப்ரல் முட்டாள் தினத்தை இங்கும் கொண்டாடுவதாகக் கூறிக் கொண்டு இளைஞர் கோஷ்டிகள் சில அட்டகாசம் புரிந்திருக்கின்றன. யாழ்ப்பாண நகரப் பகுதியில் மட்டுமன்றி குடாநாட்டின் பல பகுதிகளிலும் இந்தத் துன்புறுத்தல், நையாண்டி கட்டவிழ்த்துவிடப் பட்டிருந்தது.

பாடசாலை மட்டத்தில் வெறும் கிண்டல் செய்யும் பாவனையில் அல்லது சில நிமிடங்களுக்கு ஏமாறச் செய்யும் அளவுக்கு முட்டாள் தினக் கேலிகள் இடம்பெறவில்லை. அலுவலகங்களில் அந்த வேளைக்கு மட்டும் அவதிப்பட்ச் செய்யும் அல்லது திணுக்குற வைக்கும் செய்திகள் கூறிச் சில நிமிடங்களுக்குச் சிலரைத் தற்காலிக முட்டாள்களாக்கிச் சிரிக்கும் அளவோடு நிகழ்வுகள் கட்டுப்படுத்தப்பட வில்லை.

பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள், அலுவலகங்களை நோக்கி விரைந்த ஊழியர்கள், தமது அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்காக வீதிகளால் பயணம் செய்த பொதுமக்கள் என்று எல்லாத் தரப்பினர்களும் இளைஞர் கோஷ்டிகளால் துன்புறுத்தப் பட்டிருக்கிறார்கள். பால் வேறுபாடின்றி, வயது வித்தியாசமின்றி எல்லோர் மீதும் முட்டாள் தின வெறியாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

வியாழக்கிழமை நடந்த சம்பவங்கள் உளவியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும் அளவுக்கு, வரம்பு மீறியனவாகவும் அநாகரிகமானவையாகவும் அமைந்திருந்தன.

ஒரு சிலரின் கேலியும் விளையாட்டுத் தனமும் மற்றவர்களைத் துன்புறுத்தும் விதத்திலும் நஷ்டமுறச் செய்யும் விதத்திலும் அமைய அனுமதிக்க முடியாது. ''சிறு பிள்ளை விளையாட்டு சுண்டெலிக்குச் சிவன் போகும்'' நிலை சமுதாயக் கேட்டுக்கும் அநீதிக்கும் வித்திடும். இது போன்ற அட்டகாசத் தனம் மற்றவர்கள் சுதந்திரத்திலும், நிம்மதியிலும் அடுத்தவன் தலையிட்டுக் கெடுக்கும் ஒவ்வாத கலாசாரமாகவும், மரபுகளாகவும் மாறும் பேராபத்து உண்டு.

எங்கள் பண்பாட்டுக்கும், வாழ்க்கை முறைக்கும் ஒவ்வாத ''புதிய கலாசாரங்களை'' புகுத்துவதற்கு இடங்கொடுத்தால் அவை ஒன்றிலிருந்து பலவாகப் பெருகி எமது மூலப் பண்பாட்டு வேர்களை எரித்துப் பொசுக்கிவிடும். ஏப்ரல் முட்டாள்தின அட்டகாசம் மொட்டோடு கிள்ளப்பட வேண்டும். இல்லையேல் அது மிகக் குறுகிய காலத்தில் வேறு பல வடிவங்களை எடுத்து தமிழர் சமூக நெறிகளையும் ஒழுங்கையும் சீர்கெடச் செய்து குலைத்துவிடும்.

தமிழ்த் தேசியம், தமிழர் பண்பாடு, மரபுகள் பேணப்பட வேண்டும் என்ற புதிய எழுச்சி முகிழ்த்து வரும் வேளை இது. முட்டாள்தின அட்டகாசம், பல்கலைக்கழக ''ராகிங்'' விளையாட்டுப் போட்டிகளில் மோதல், ஊர்ப் பெயரால் சண்டைகள் என்பன அந்த எழுச்சிக்கு எதிரான நீரோட்டமாகப் பாய அனுமதித்தால் புதிய சுதேசியம் பேணும் எழுச்சி எண்ணம் கருவில் அழிந்து போகும். மிகப்பெரிய அபாயம் உண்டு. அதற்குச் சவாலாகவும் அமைந்துவிடும்.

''உதயன்'' ஆதரவில் கூடைப்பந்து:

# யாழ். அணிகளுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகள்

## இன்று ஆட்டங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 3

விளையாட்டுத்துறை அமைச்சு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தும் விருப்பத்துக்குரிய குழுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

''உதயன்'' நிறுவன ஆதரவில் கழகங்களின் ஆண், பெண் அணிகளுக்கிடையில் தனித்தனியாகக் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

இன்று முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை தினசரி மாலையில் யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நடைபெறும்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆண்கள் பிரிவின் முதலாவது ஆட்டத்தில் ஜொனியன்ஸ் வி. க: அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் நீல அணி மோதும். மாலை 4 மணிக்கு பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்பக் கன்னியர்மடம் அணி மோதும்.

ஆறு பேர் கொண்ட கழக அணிகளுக்கிடையிலான வன்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை மூன்று நாட்கள் தொடர்ந்து காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். 17 கழக அணிகள் இப்போட்டித் தொடரில் பங்குபற்றுகின்றன.

ஹொக்கிப் போட்டிகள் எதிர்வரும் 27, 28, 29ஆம் திகதிகளில் தினசரி பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

25, 26ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் சடுகுடுப் போட்டிகளையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இச்சுற்றுப் போட்டிகளின் ஆட்டங்கள் யாவும் விலகல் முறையில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. சு. கனகராஜா செய்துவருகிறார். (உ)

# கம்பன் விழா மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 3

நல்லூர் வடக்கு வீதியில் அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்திவரும் கம்பன் விழாவின் மூன்றாம் நாள் காலை நிகழ்ச்சிகள் நாளை காலை 9-30 மணிக்கு திரு. வர்ண. இராமேஸ்வரனின் கடவுள் வாழ்த்துடன் செல்வி புஷ்பா செல்வநாயகத்தின் தலைமையில் ஆரம்பமாகும்.

தலைமையுரையைத் தொடர்ந்து யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

காலையில் சிறப்பு நிகழ்ச்சியாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் 'பெண்ணறிவின் நுண்ணறிவு'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும்.

கோசலையின் நுண்ணறிவு பற்றி க. சொக்கலிங்கமும், கூனியின் நுண்ணறிவு பற்றி திருமதி மனோன்மணி சண்முகதாஸும் தாரையின் நுண்ணறிவு பற்றி திரு. கே. சோமசுந்தரமும், மண்டோதரியின் நுண்ணறிவு பற்றி திரு. இ. ஜெயராஜும் கருத்துரை வழங்குவர்.

மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-30 மணியளவில் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

திருமதி மேரி சரோஜா ஜஸ்ரினின் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையுரை நிகழ்த்துவார். திரு. டொமினிக் ஜீவா தொடக்கவுரை ஆற்றுவார்.

தொடர்ந்து கவிஞர் இ. முருகையன் தலைமையில் தூதுக் கவியரங்கம் நடைபெறும். 'வெம்பி விரக்தியுறல் விட்டு விரைந்து போய் கம்பனுக்குச் சொல் கவிதைத் தூது'' என்ற தலைப்பில் நடைபெறும் கவியரங்கில் பல்வேறு தூதுப் பொருள்களைக் கொண்டு கவிஞர்கள் தூது விடுவர்.

செல்வி வே அருந்ததி (இ. போ. ச. பஸ்), த ஜெயசீலன் (பதுங்கு குழி), த. சிவசங்கர் (இடிந்த திரையரங்கு), நாக. சிவசிதம்பரம் (பெற்றோல் குப்பி), ஜெ. கி. ஜெயசீலன் (தண்டவாளம்), கல்வயல் வே. குமாரசாமி (கற்பூரம்), ச. வே. பஞ்சாட்சரம் (எரிந்த நூல்நிலையம்), நாவண்ணன் (வெற்று மின் கம்பம்), காரை செ. சுந்தரம் பிள்ளை (பொம்மர்), சோ. பத்மநாதன் (வெடிக்காத ஷெல்) ஆகியோர் தமக்குரிய பொருள்கள் ஊடே கவிதைத் தூது விடுவர். [உ]

பேராதனை பல்கலைக்கழக

# வெளிவாரிப் பரீட்சைகள் இங்கு நடைபெறமாட்டா

யாழ்ப்பாணம், ஏப். 3

எதிர் வரும் 16 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் பேராதனைப் பல்கலைக்கழக இறுதியாண்டு கலைமாணி வெளிவாரிப் பரீட்சைகள் திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்தில் நடைபெறமாட்டா.

அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து யாழ். செயலகத்துக்கு நேற்று இத்தகவலை அனுப்பி இருந்தார்.

யாழ். அரச அதிபர் எடுத்த முயற்சியின் பயனாக மேற்படி பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் 'குமண' கப்பலில் எடுத்துவரப்படுகின்றன. (ஓ-3)

## பரீட்சை கொழும்பில்

யாழ்ப்பாணம், ஏப். 3

இலங்கை நிர்வாகச் சேவையின் (எஸ்.எல்.ஏ.எஸ்) முதலாம் தரத்துக்கான பரீட்சை இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

கொழும்பு சென்றிருக்கும் யாழ் அரச அதிபர் நேற்று அங்கிருந்து இந்தத் தகவலை செயலகத்துக்கு அனுப்பியிருந்தார். (ஓ-3)

## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயில் ஏழாம் திருவிழா நாளான, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை விநாயகப் பெருமான் கைலாச வாகனத்தில் திருவீதியுலா வருவார். (ஓ)

o o o

யாழ். வண்ணை சிவன் கோவிலின் தேர்த் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-20 மணிக்கு நடைபெறும். (க)

o o o

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் தேர்த் திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறும்.

o o o

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் சப்பற வெள்ளோட்டமும், சப்பறத் திருவிழாவும் இன்று நடைபெறுகின்றன. நாளை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும். [க]

o o o

அளவெட்டி தெற்கு- நாகேஸ்வரம் ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை பங்குனி ஏகாதசி விரத விழா சிறப்பாக நடைபெறும். [க-51]

o o o

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்பாள் திருக்கோயில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 15ஆம் திகதி வியாழக் கிழமை பூர்த்தி விழா நடைபெறும். (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 3

கொழும்பில் இருந்துவரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்த உள்ளது.

நாளை 4ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடலும்—

அதே தினம் பிற்பகல் 2.00 மணிக்கு தொண்டர்களுடன் கூட்டம் ஒன்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தில் நடைபெறும். (இ)

## இன்றைய ஆட்டம்

யாழ். பல்கலைக்கழக அணிக்கும் யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான — 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட — சினேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். (உ)

o o o

உரும்பராய் — ஊரெழு விளையாட்டுக் கழகங்களின் ஒன்றியத்தால் நடத்தப்படும் காட்சி உதைபந்தாட்டப் போட்டித் தொடரில், இன்று மாலை உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ காங்கேசன்துறை யங் றோயல் வி க. அணி எதிர் மயிலங்காடு ஸ்ரீமுருகன் வி.க. அணி.

★ நாவாந்துறை சென். நிக்கலஸ் வி. க அணி எதிர் குருநகர் சென். றோக்ஸ் வி. க. அணி. (உ)

# 'குமாரி' திருமலை சென்று மாவுடன் திரும்பி வரும்

யாழ்ப்பாணம், ஏப். 3

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'குமாரி' கப்பல் திருகோணமலைக்குச் சென்று பிரிமா ஆலையில் இருந்து மா ஏற்றி வரவிருக்கிறது.

எதிர் வரும் செவ்வாய்க் கிழமை அளவில் பொருள்கள் இறக்கி முடிந்ததும் கப்பல் திருகோணமலைக்கு புறப்படும்.

இக்கப்பலில் 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மா ஏற்றி வரப்படவிருக்கிறது.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு

# மீனவர் குடும்பங்களுக்கு திங்கள் முதல் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு மீனவர் குடும்பங்களுக்கான — ஆறு வார கால இலவச உலர் உணவு நிவாரணம் — நாளை மறுதினம் திங்கட் கிழமை முதல் விநியோகிக்கப் படவுள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கான நிவாரண விநியோகமே நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

மேசன் தொழிலாளர்களுக்கான — மூன்று வாரங்களுக்குரிய நிவாரணமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-17)

## நாளை

சுகவாழ்வு ஆலோசனைக்கான சங்கத்தின் 1993 பட்டமளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 657/1ஆம் இலக்கத்தில் உள்ள தொடர் பகத்தில் நடைபெறும். (க)

o o o

சுன்னாகம் திருநெறிய திருமுறைச் செல்வ நிதியம் ஒழுங்கு செய்துள்ள திருத்தலப்பதிநடை நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4-30 மணிக்கு தவத்திரு சண்முக வடிவேல் சுவாமிகள் தலைமையில் சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலில் ஆரம்பமாகி வண்ணை வைத்தீஸ்வரா வசந்தமண்டபத்தைச் சென்றடையும். (க)

o o o

வட இலங்கை மருத்துவர் சங்கத்தின் ஆதரவில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வண்ணை மேற்கு ஆஸ்பத்திரியில் எய்ட்ஸ் நோயைப் பற்றி யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம் ஆய்வுரை நிகழ்த்துவார். (க)

## இன்று

தென்மராட்சிக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும். (க)

## நீரில் மூழ்கி மரணம்

தாளையடி, ஏப். 3

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

இடம்பெயர்ந்து செம்பியன்பற்று வடக்கில் தங்கியிருந்த கணபதிப்பிள்ளை விக்கினேஸ்வரன் [வயது 18] என்பவரே இறந்தவர் ஆவார். [இ-144]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA ENGLISH ACADEMY

## DR. S. SIVAKUMARAN

**CHAMPION OF HEALTH AND LOVER OF MEN**



All hail to the Doctor, the kindliest of souls
You meet in hospital wards when all flee for their souls!
A never failing friend ever ready resourceful and bold,
He is tender to all - to young and to old

From the sweetest of slumbers he starts at our call,
For our health and our welfare will venture his all;
He starts not to interrogate our rank or our wealth,
But is ours at a moment for succour and health

And the day is not for when all shall behold
The banner of health over the nations unrolled;
And the Doctor acknowledged by tongue and by pen
As the Champion of Health and the lover of Men;

9, Rakka Lane,
Chundikuli,
Jaffna.

LUXINTENEBRIS

[C-4872]



**VACANCY:-** POST OF PRINCIPAL,
ST. JOHN'S COLLEGE,
JAFFNA.

**REQUIREMENTS:-** Applicants Should be

(i) Member of good standing in any one of the Churches affiliated to the National Christian Council of Sri Lanka (NCC)

(ii) Should possess Post-Graduate qualifications with experience in teaching and administration.

Applications should be forwarded to the following address before 10-04 1993.

The Chairman,
CMS Governing Body for Educational Institutions in Sri Lanka,
368/2, Bauddhaloka Mawatha,
Colombo - 7.

(25072)


## பாடசாலையில்

கொடிகாமம் போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும். (க-ரி)

## கம்பன் விழா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை, பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிபர் க. சச்சிதானந்தம், திரு. சி. சிவஞான சுந்தரம் ஆகிய மூதறிஞர்கள் பொன்னாடை போர்த்தியும் பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

திரு. சி. சிவஞானசுந்தரத்தின் சார்பில் அவரது துணைவியார் பரிசில்களைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்து வைத்திய கலாநிதி ச. சிவகுமாரன் இதற்கென அழகுறச் செதுக்கப்பட்ட சிம்மாசனத்தில் வீற்றிருந்த பின்னர் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா ''மகர யாழ்'' விருதை அவருக்கு வழங்கிக் கௌரவித்தார்.

அதற்கு முன்னர் அவர் சங்கொலி எழுப்பப்பட்டு, ஆலவட்டம், குடை சகிதம் யாழ். மக்கள் சார்பில், யாழ் மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கத்தினால் மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

டாக்டர் சிவகுமாரன் இலக்கிய நயமும், கருத்தாழமும் மிக்க பதிலுரை நிகழ்த்தினார். அவர் தமக்கு அணிவிக்கப்பட்ட தங்கப் பதக்கம், பரிசுப் பணம், விருது ஆகிய மூன்றையும் மேடையில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி ந கனக ரத்தினத்திடம் அன்பளிப்புச் செய்தார்.

''கம்பகளஞ்சியம்'' நூலை பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார். முதற்பிரதியை மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா வாங்கினார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை ஆற்றினார்.

விழாக்காண பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். பிரமாண்டமான பந்தல் நிரம்பி வழிந்தது. குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்திருந்தனர். (அ 111)


**அறிவுக் களஞ்சியம் - 10**

வெளிவந்துவிட்டது!

குறைவான பிரதிகளே அச்சாகியிருப்பதால், உங்கள் [illegible] பெற்றுக் கொள்க.

(சி-4723)


# வருடாந்த நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 04 — 1910

மறைவு: 03 — 04 — 1970

## அமரர் ஆ. மார்க்கண்டன்

B A, B Sc.

Post Graduate Trained (P. G. T.)

முன்னை நாள் அதிபர்

கலையுணர்வும் விஞ்ஞானக் கருத்துணர்வும் கற்றுயர்ந்து
விருது பெற்றே
நிலை தவறா நேர்மையினால் நீதி நிலை
நாட்டினையால்
எதிர்த் தோர்க் கெல்லாந்
தலை வணங்கா மிடுக்குடனே தந்நலமே கருதாமல்
கொண்டு தாங்கி
நிலைதளரா அன்பினர்க்கே யோர்மொழிதான்
கூறாமல்
நீங்கிச் சென்றாய்

தங்களை என்றும் நீங்கா அன்புடன் நினைவு கூரும்

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

'விக்கினேஸ்வரி பவனம்'
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.

(5870)

# ஓராண்டு நினைவஞ்சலி

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலைமிசை நீடு வாழ்வார்''

— திருக்குறள்



தோற்றம்: 21 — 03 — 1912

மறைவு: 15 — 03 — 1992

அமரர்

## வெற்றிவேலு சுப்பிரமணியம்

திதி: 03 — 04 — 1993

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இராச வீதி,
கோப்பாய் மத்தி.

(25066)

# மரண அறிவித்தல்கள்

## பண்டாரம்பிள்ளை நடராசா

நவாலி வடக்கைச் சேர்ந்த பண்டாரம்பிள்ளை நடராசா காலமாகிவிட்டார். இவர் ஹட்டன் பண்டாரம்பிள்ளை ஸ்ரோர்ஸின் முன்னாள் உரிமையாளரும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கடம்பேஸ்வரன் (கொக்குவில்), குகேஸ்பரன் (உடுவில்), ஜெகதீஸ்வரன் (''ஒட்டோஸ்'' வவுனியா), காலஞ்சென்ற காத்திகைப் பிரகாசம், ஸ்ரீஸ்கந்தராசா (உடுவில்), புவனேஸ்வரி ஸ்ரீமுருகன் (கொழும்பு), சறோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, ஜெயலட்சுமி, நகுலேஸ்வரி, ஞானேஸ்வரி, சந்திரா, டொறத்தி, சச்சிதானந்தம், குமாரசாமி (யாழ் ஆஸ்பத்திரி) ஆகியோரின் அன்பு மாமனாருமவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03-04-1993) சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் ஆரியம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. கடம்பேஸ்வரன்
(மகன்)

சோமசுந்தரப்புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(25064)

## கந்தவனம் அன்ரன் சிவபாஸ்கரன்

(பாஸ்கரன்)

கரகம்பனையைப் பிறப்பிடமாகவும் தென்மூலை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் அன்ரன் சிவபாஸ்கரன் 02-04-93 நேற்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தவனத்தின் புதல்வனும், மேரி பிலிசியாவின் அன்புக் கணவரும், ஜரா காமலீற்றா (றெனி), ஜெமைன் ஜெஸ்ரினா (நிதி) [திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கில பாடசாலை மாணவிகள்], கென்சி யோஜினா (சுஜி) [புனித திரேசா மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவி, சற்குணதேவி (நெசவு ஆசிரியர்), சுகுணாதேவி (மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை), சிவா, காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற லூயிஸ், பிறிச்செற் ஆகியோரின் அன்பு மருமகனும், றபாயல் (ஆசிரியர், றெட்னேஸ்வரி வித்தியாலயம், அச்சுவேலி), கபிறியேல் (ஜேர்மனி), கத்தறின் (ஜேர்மனி), மைக்கல் (ஜேர்மனி), வெரோணிக்கா (கொழும்பு), அஞ்சலா, விக்ரர் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 03-04-93 (சனிக்கிழமை) பி. ப. 2.00 மணிக்கு புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லூயிஸ் றபாயல்
(மைத்துனர்)

சங்கானை வீதி.
அச்சுவேலி (தென்மூலை)

(25074)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்)டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292 2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03-04-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org